# கல்கி

நிறுவனர்:

29-9-68

விலை 20 காசு



# கேள்வி ? பதில்

**1. மருத்துவத்துக்காக அமெரிக்கா சென்றுள்ள அறிஞர் அண்ணா அவர்களை, சுப்பிரமணியமும், இந்திரா காந்தியும் சென்று பார்த்ததும், மொரார்ஜி பார்க்கப் போவதாக அறிவித்திருப்பதும் எதனால்?**

மனிதாபிமானத்தின் அடிப்படையில் நிகழ்ந்திருப்பவை இவை. இந்திரா அம்மையாருக்கும், சுப்பிரமணியத்துக்கும, மொரார்ஜிக்கும்கூட அறிஞர் பெருந்தகையின்மீது தனிப்பட்ட மதிப்பும் அன்பும் உண்டு. இதற்கு அரசியல்வண்ணம் பூசக்கூடாது. பூசுவதானால் தென்னாட்டு மக்களின் குறிபபாக தமிழக மக்களின் அன்பைப பெற இதுவும் ஒரு வழி என்றுதான் கூறவேண்டி இருக்கும்! இதுபோல் யாரும் கற்பனை செய்யக்கூடாது.

**2. 'விதிப்படி–வேலை" என்றால் என்ன?**

வருகைப் பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு அலுவலகத்தில் நாற்காலியில் சென்று அமர்ந்துகொண்டு, ஒரு வேலையைச் செய்வதற்குப் பழகிக்கொள்ளுதல் என்று பொருள். அதாவது பழகிக் கொள்வோரிடம் சுறுசுறுப்போ, திறமையோ காண முடியாதல்லவா! அதுபோல! வேலை செய்வதைப்போல நடித்தல்! வேலை மட்டும் முழுமையாக எதுவும் நடக்காது! வேலை நிறுத்தம் செய்வதில் இதுவும் ஒரு முறை! வேலை செய்யப் பயப்படுவோருக்கும்கூட இதுபொருந்தும்!

**3. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் விவசாயத் தகராறு அடிக்கடி ஏற்படக் காரணமென்ன?**

பிற மாவட்டங்களில் கால நிலை கெட்டு, உற்பத்தி பாதிக்கப்பட்டாலும், அதனை முழு அளவுக்கு ஈடு செய்யக்கூடியவை தஞ்சையும், திருச்சியுமே! கேந்திரமான இந்த இடத்தில் உற்பத்தி பாதிக்கப்பட்டுவிட்டால், அதன் எதிரொலி நாடெங்குமே பரவலாக இருக்கும் அந்த எதிரொலியில் ''அரசியல் கடை'' நடத்தவேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுவோர் தஞ்சை, திருச்சி பகுதியில் ஆண்டுக்காண்டு மிகுந்து கொண்டு வருகிறார்கள். உணவுப் பண்ட உற்பத்தியோடு அரசியலை இணைப்பதற்கு முடிவு கண்டாலன்றி இதற்கு விடிவுமில்லை! உற்பத்தி, குறிய ளவை மிஞ்சும்போது அதன் பலன் மக்களுக்குக் கிடைக்கவும் வழியில்லை.

**4. டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் கொள்முதல் விலைகள் குறைக்கப் படவேண்டும் என்று டெல்லி வற்புறுத்தியுள்ளதா?**

இந்த ஆண்டு பல மாநிலங்களில் அதிக உற்பத்தி ஏற்பட்டிருப்பதால், குறிப்பிட்ட சில மாநிலங்களில் கொள்முதல் விலையைக் குறைக்கவேண்டும் என்று கருத்தறிவிக்கப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை!

**5. காமராசரது பேச்சு 'சூடு' பிடித்திருப்பதைக் கவனித்தீர்களா?**

சுப்பிரமணியம் வெளிநாட்டிலிருந்து திரும்பி வருவதற்குள் தன் செல்வாக்கை மிகுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முடிவெடுத்துச் செயல்படுவதாக சத்தியமூர்த்தி பவனிலிருந்து செய்திகூட கிடைத்திருக்கிறதே!

**6. நேருவுக்குப் பிறகு சிறந்த தலைவர் அறிஞர் அண்ணாதான் என்பது தவறு என்று ஒரு புதிய காங்கிரஸ்காரர் எழுதி இருப்பது பற்றிய விளக்கம் என்ன?**

அப்படி எழுதியவரைப் பற்றிய விளக்கம் தேவையா? அவர் எழுதிய கருத்துப் பற்றியா? கருத்துப் பற்றி என்றால், நேருவைவிட சிறந்த தலைவர் அண்ணா என்பதுதான் பொருந்தக் கூடியதாகும். நேரு புகழ்பெற்ற சூழ்நிலை வேறு —அண்ணா புகழ்பெற்ற சூழ்நிலை வேறு. அண்ணா அவர்கள் இதுவரையில் எதிர் நீச்சலிலேயே உலகப் புகழை எய்தி இருக்கிறார்கள். நேரு அப்படி அல்ல, சூழ்நிலை அவருக்கு அப்படி ஒரு நிலையை உண்டாக்கித் தந்தது! அதற்காக நேருவைக் குறைத்து மதிப்பிடவில்லை, ஒவ்வொருவர் ஒவ்வொருவகையில் திறமையானவர் — சிறந்தவராகத்தான் இருப்பார்கள். நேரு புகழ் பாடவேண்டும் என்பதற்காகப் பிறரை குறைத்து மதிப்பிடக்கூடாது. தன் வயிறு நிரம்பவேண்டும் என்பதற்காகக் காமராசரைத் துதிபாடி—சுப்பிரமணியத்தை இழிவு படுத்திக் கொண்டிருப்பவரைப் பற்றியா நினைத்துக் கொண்டிருக்கிறீர்?

**7. மத்திய அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தத்தின்போது ஏற்பட்ட கைகலப்பில் உயிர் துறந்தது எத்தனைப் பேர்?**

பஞ்சாபில் தடியடியால் உயிர் துறந்தோர் 2 பேர், பிற மூன்று மாநிலங்களில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானோர் 9 பேர். மொத்தம் 11 பேர் பலியாகி இருக்கிறார்கள்!

**8. அனைத்திந்திய வானொலி நிலையங்கள் ஒரு சார்பாகவே இயங்குவதைத் தடுக்க முடியாதா?**

வானொலி நிலையங்களின் நிருவாக மேற்பார்வை நேரடியாக மத்திய அரசுக்கு உரியதாக இருக்கின்றவரையில் எதனையுமே தடுக்க முடியாது. ஒரு சார்பாக இயங்கும் போக்கினை வன்மையாகக் கண்டித்துத்தான் அறிஞர்கள் பலர் அதனை தனி ஒரு கார்ப்பொரேஷனிடம் விடவேண்டும் என்று அடிக்கடி கோருகிறார்கள்!

**9. நீதி விசாரணைக்கு தான் தயார் என்று நிஜலிங்கப்பா அறிவித்திருப்பது, அவரது தூய்மையைக் காட்டவில்லையா?**

அப்படியேநம்புவோம்! ஆனால் மைசூரைச் சேர்ந்த இரண்டு எம். பி. - க்கள், விசாரணைக்கு ஏற்பாடு செய்தே ஆகவேண்டும் என்று ஜனாதிபதியிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு முன் மைசூர் எம். எல். ஏ.-க்கள் 35 பேர் 26 புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கு மேலாக முன்னாள் முதல்வர் அனுமந்தையாவே கூறி இருக்கிறார். எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால் என்ன மிஞ்சுமோ?

**10, தமிழகத்தில் பரவலாக நல்ல மழை பெய்துவிட்டிருக்கிறது என தெரிவித்துக்கொள்ளலாமா?**

தாராளமாக! ஏனென்றால் இப்போது தமிழ் நாடெங்கும் பரவலாக அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன அல்லவா!

★



தான் வினை செய்யும் வகையினை முறை
யாக உணர்ந்து, அதனை நிறைவேற்றும்
பொருட்டு எடுக்கப்படுகின்ற காப்பு முறை
களைச் செவ்வியதாய்த் தேர்ந்து தற்காப்பு
முறைகளையும் ஒழுங்குபடக்கொண்டிருந்தால்
அதுவே பகைமையைமாய்த்து விடும்-குறள் 878


# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 29—9—68 இதழ் 10


# பகையுணர்ச்சி பயன்தராது!

கடந்த 19-9-68-ல் நடைபெற்ற மத்திய அரசு ஊழியர்களின் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம், ஒரு நாள் வேலை நிறுத்தமாக மட்டுமே இல்லாமல், பல விதமான பின் விளைவுகளைத் தோற்றுவித்திருக்கிறது.

வருந்தத்தக்க, பல தீமைகளை உண்டாக்கக்கூடிய அளவுக்கு நிலைமை மாற்றமடைந்ததற்கு, மத்திய அரசு அவசரச் சட்டமே காரணம் என்பது வெள்ளிடைமலை.

வேலை நிறுத்தம் நடைபெறாமல் தடுத்துவிட வேண்டும் என்று மத்திய அரசு கருதியதனைத் தவறென்று யாரும் கூறமுடியாது. அந்த நோக்கத்தோடு பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தை, பின் விளைவுகள் காரணமாக வெறுத்தொதுக்க வேண்டியதுமில்லைதான்.

மத்திய அரசானாலும், மாநில அரசானாலும் ஒரு சட்டத்தைச் செயல்படுத்த விரும்புவது இரண்டே இரண்டு காரணங்களுக்காகத்தானிருக்கமுடியும் ஒன்று மக்கள், ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள தங்கள் அனைத்து உரிமைகளையும் ஒழுங்கு முறைக்குட்பட்ட நியதியோடு தடுக்கப்படாமல் பெற்று அனுபவிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு நிருவாகத்தை இயங்கிக் கொண்டிருக்க வழிவகை காணும் சட்டங்கள், அடுத்து உரிமைகளைப் பெற்று வாழ்வோர், தடம் புரண்டு போகாதிருக்கும்படியான நிலைமைகளைத்தோற்றுவிக்கும் வகையான சட்டங்கள். இவை இரு பிரிவுகளிலேயே அனைத்துச் சட்டங்களுமே அடங்கிவிடக் கூடும்.

மத்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தை நாம் முதல் பிரிவுடனேயே இணைத்துக் காண்கிறோம். அப்படிப் பார்க்கிறபோதுதான் வெறுத்தொதுக்கத் தேவையில்லாதது என்பதையும் உணர முடிகிறது.

வேலை நிறுத்தம் நடைபெறவிடக் கூடாது என்று மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்று பல புதிய பிரச்னைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

அவசரச் சட்ட விதிப்படி, வேலை நிறுத்தம் செய்வோர் தண்டிக்கப்படலாம். வேலையிலிருந்து நீக்கப்பெறலாம். தூண்டிவிடுவோர் யாராயினும், கைது செய்யப்படவும் வகைகள் இருக்கின்றன, இதற்கு முன் அவர்கள் பெற்று வந்த அனைத்து சலுகைகளும்கூட பறிக்கப்படலாம்! அதோடு, வேலை நிறுத்தங்களை ஒரு அமைப்பின் கீழ் இருந்து செயல்படுத்தும்போது அந்த நிலைமைகளைத் தோற்றுவிக்கும் தொழிற் சங்கங்களின் உரிமைகளைப் பறித்து, அங்கீகாரத்தையும் திரும்பப் பெற்றுக்கொண்டுவிடலாம்.

19-ம் நாள் நடைபெற்ற மத்திய அரசு ஊழியர் வேலை நிறுத்தம் முழுமையான அளவுக்கு வெற்றி பெற்றது என்று கூற முடியாவிட்டாலும், அது முழுத் தோல்வி அடைந்துவிட்டது என்றும் யாரும் கணித்துக் கூற முடியாது என்பதனைத்தான் பின் விளைவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

பின் விளைவுகள் என்று நாம் எடுத்துக் காட்டுவது, வேலை நிறுத்தம் காரணமாக தபால் பிரிவு ஊழியர்களிடையேயும், வேறு சில பிரிவுகளிலும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட காரணத்துக்காக வேலை நீக்கம் செய்ய மத்திய அரசு, அவசரச் சட்ட விதிப்படி முற்பட்டிருப்பதும், அந்நிலையை விரும்பாத வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத பலரும்கூட ஒரு மணி, இரண்டு மணி என்று அலுவலகங்களுக்குள்ளே 'கண்டனம்' தெரிவித்து வேலை நிறுத்தம் செய்வதும், ஆர்ப்பாட்டங்களில் இறங்குவதுமான நிலைமைகளேயாகும்.

நாடு மொத்தத்திலும் சில பல பகுதிகளில் அஞ்சல் நிலையங்களே முழுமையாகச் செயல்படாமல் இருக்கிறது. இதிலிருந்து ஒரு புதிய நிலைமையைத் தோற்றுவிக்க மத்திய அரசும் புதிய ஆட்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் பணியில் தீவிரம் காட்டத் தொடங்கி இருக்கிறது.

அவசரச் சட்டத்தின் மூலம் என்ன நடைபெற வேண்டும் என்று அரசு விரும்பியதோ அது பெருமளவுக்கு—திருப்திகரமான அளவுக்கு நடைபெற்று விட்டிருக்கிறது. அதாவது பெரும்பான்மையான அலுவலகங்களில் பணி ஏதும் தடைப்படாமல், சீராகவே இயங்கி வந்திருக்கிறது. அந்த அளவுக்கு அவசரச் சட்டம் பெரும் அளவுக்கு உதவி புரிந்திருக்கிறது.

மத்திய அரசு அதோடு திருப்தி அடைந்திருந்தால் பின் விளைவுகள் எதுவும் ஏற்படாமல் தடுத்திருக்க முடியும். இந்த விளைவுகளும், மத்திய அரசு, சட்டவிதிகளைச் செயல்படுத்துவதில் காட்டுகிற தீவிரமும். இன்னும் பல புதிய குழப்பங்களைத் தோற்றுவிக்கவே செய்யக்கூடும்.

ஊழியர்கள் பழிவாங்கப்படுவதின்றும் தடுக்கப்பட வேண்டும். தொழிற் சங்க அமைப்புகளின் அங்கீகாரம் பறிமுதல் பற்றி மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இதே நேரத்தில், மத்திய அரசு ஊழியர்களும், மக்களின் பொதுநன்மையையும், நிர்வாகம் சீர்குலையக் கூடாது என்ற காரணத்தாலும் பிறப்பித்த தடையுத்தரவுச் சட்டத்துக்கும் அதன் விதிமுறைகளுக்கும் உரிய மதிப்புக் கொடுத்தே தீரவேண்டும்.

மத்திய அரசும் அதன் ஊழியர்களும் ஒருவரை ஒருவர் வீணுக்கு முரண்டு பிடித்துக்கொண்டு, பிரச்னைகளை அதிகப்படுத்திக்கொண்டு போவது வளர்ந்து கொண்டு வரும் ஜனநாயக நாட்டுக்கு ஆரோக்கியமான ஒரு வழிமுறையாக இருக்க முடியாது. இருதரத்திலுமே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால்தான் எந்த ஒரு பிரச்னையுமே முடிவுக்கு வரமுடியும்! ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து பிரச்னைக்கு முடிவுகாண விழைவதன்மூலம் யாருடைய மதிப்பும் குறைந்துவிடாது; மாறாக மிகவே செய்யும். நாட்டுக்கும் அது நல்லதாகவிருக்கும்.

எனவே, ஊழியர்களும் புதிய புதிய கிளர்ச்சிகளிலும், ஆர்ப்பாட்டங்களிலும் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபடுவதைக் கைவிட்டு, அரசோடு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்!

அரசும் சட்டத்தைக் காரணம் காட்டி, விதிமுறைகளின்படி பழி வாங்கும் படலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும். நடக்கப்போவது எது என்பதை காலம் தான் நிர்ணயிக்க வேண்டும்!

# தியாகத்துக்குத் தந்த நிதி!

[ ஒரு கற்பனை நாடகம் ]

திருவாரூர்-முத்.துரைராஜ்

இடம்: திருமூர்த்தித் தெரு காமராஜர் இல்லம் படுக்கை அறை

நாள்: 22-9-68 ஞாயிறு இரவு 12மணி.

நிகழ்ச்சி: காமராசர் மனக்குழப்பத்தில் படுக்கையில் படுத்திருக்கிறார்!

[அறையெங்கும் புகை மண்டலம் சூழ்ந்துகொள்கிறது. புகையின் நடுவே ஒரு ஒளிக்கீற்று தென்படுகிறது. கண்களைக்கசக்கிக்கொண்டு காமராசர் பார்க்கிறார். விம்முகிற ஒலி மட்டும் கேட்கிறது ]

**காமராசர்:-** யாருடா அங்கே அழுவறவன்? அர்த்த ராத்திரியிலெ என் அறைக்குள்ளே வந்தவன் யாரு? யாருன்னேன்?

**குரல்:-** என்னைத் தெரியவில்லையா தலைவர் அவர்களே! நான்தான்! நான்......

**காம:-** (குறுக்கிட்டு) நான்னா யாரு? எல்லாருமே நான் நான்னு பேச ஆரம்பிச்சுட்டானுங்க நான். நான்னு பேசறது அகம்பாவம் பிடிச்ச பேச்சுன்னேன்!

**குரல்:-** ஒத்துக் கொள்கிறேன் தலைவர் அவர்களே! நானே தலைவன்! நானே மேதாவி! நானே அனைத்தும்! நானில்லாவிட்டால் புல்லும் பூண்டும் முளைக்காது; காற்றும் புயலும் அடிக்காது என்று பேசுவதெல்லாம் அகம்பாவம் பிடித்த பேச்சுத்தான்! ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நான் சொல்ல வந்தது......

**காம;-** மறுபடியும் ஒரு நானா?...சரி, சரி, சொல்லித் தொலை!

**குரல்:** சொல்லித் தொலைக்கிறேன்! தொலைக்கப்பட்டுப் போனவன், தொலைந்தே போகவேண்டியவன் தானே! சொல்லித் தொலைக்கிறேன்! தலைவர் அவர்களே! இந்த நாடு அடிமை நாடாய் இருந்த நேரத்தில், வெள்ளைக்காரர்களின் வேட்டைக் காடாய் இருந்த காலத்தில் என்னையும் என் இளமையையும் அதனை எதிர்த்து நடத்திய சுதந்திர வேள்விக்கு 'ஆகுதி' கொடுத்து அனாதையாகிவிட்டவன்! காந்தியின் பேர் சொல்லி வந்தோருக்கெல்லாம் வாரி வழங்கிவிட்டு 'வாய் வார்த்தை' ஒன்றையே எஞ்சிய செல்வமாகக் கொண்டுவிட்ட ஏழை......

**காம:-** ஓகோ! காங்கிரஸ் தியாகியா? காங்கிரஸ் தியாகின்னு ஒரு வார்த்தையிலேயே சொல்லி இருக்கலாமின்னேன்!

**குரல்:-** ஆமாம்! தலைவர் அவர்களே! நான் காங்கிரசுத் தியாகிதான்! ஒருமுறை அல்ல—இருமுறை காங்கிரசுக்காகத் தியாகம் புரிந்தவன்!

**காம:-** தியாகமாம் தியாகம்! நான்கூடத்தான் பல தடவை ஜெயிலுக்குப் போயிருக்கேன்னேன்! அதெல்லாம் இப்ப யாருகேட்டா? உனக்கு என்ன வேணும்?

**குரல்:-** தலைவர் அவர்களே! இருமுறை தியாகி என்றேனே! விவரம் அறிவீர்களா? சொல்கிறேன் கேளுங்கள்! அன்று என் உடலையும், பொருளையும் இந்த நாட்டின் சுதந்திரத்துக்காக நான் காங்கிரசுக்குத் தியாகம் செய்தேன்! இப்போது...

[மீண்டும் விம்மும் குரல் மட்டும்...]

**காம:-** இப்போ என்னா? ஏன் அழுறேன்னேன்! காங்கிரஸ் தியாகிகளுக்கெல்லாம்தான் 5 ஏக்கர் நிலம் கொடுத்திருக்கோமேன்னேன்! ஒழுங்கா விஷயறதை வச்சுக்கிட்டு...

**குரல்:-** (குறுக்கிட்டு) இருங்கள் தலைவர் அவர்களே! 5 ஏகர் இருக்கட்டும்! அந்தக் கதை அப்புறம் ஆகட்டும்! இப்போது இரண்டாம் முறையாகவும் காங்கிரசைக் காப்பாற்ற நான் உயிரைக் கொடுத்திருக்கிறேன்! என் உடல், பொருள், ஆவி அனைத்தும் காங்கிரசுக்கே கொடுத்துவிட்டவன் நான்!

**காம:-** நீ செத்துப்போயிட்டவனான்னேன்! உண்மையான தியாகி! இருக்கிறவன் கொஞ்சபேரு இருந்துக்கிட்டு கழுத்தை அறுக்கிறாப்போலே நீயும் வந்துட்டியோன்னு நெனைச்சேன்னேன்! ஆமாம், நீ யாருன்னு சொன்னே!

**குரல்:-** நான் காங்கிரஸ் வாழ்வதற்காக உயிரையும் கொடுத்துவிட்டவன்!

**காம:-** பேரைச் சொல்லுன்னேன்!

**குரல்:-** காங்கிரசை வாழவைக்க — காங்கிரசில் சில பேரை பெருந்தலைவர்களாக ஆக்கிவைக்க-அவர்களது ராஜபோக வாழ்க்கை ஆடாமல் அசையாமல் குறுகாமல், கூசாமல், தேயாமல் குறையாமல் இருப்பதற்காக இன்னுயிரை ஈந்தோர் எத்தனையோ ஆயிரம்பேர் இருக்கிறார்களே! எல்லாருடைய பெயரும் உங்களுக்குத் தெரியுமா?

**காம:-** அது அவசியமில்லேன்னேன்! எந்தெந்த சமயத்திலே எவனெவன் பேரு வேணுமோ, அந்தந்த சமயத்திலே அவனவன் பேரு தெரிஞ்சா போதுமின்னேன்! இப்ப, ஒம்பேரு என்னான்னேன்?

**குரல்:-** ஒரே வார்த்தையில் சொல்லட்டுமா?

**காம:-** நீட்டி முழக்கியே சொல்லுன்னேன்!

**குரல்:-** நீட்டி முழக்கி! தலைவர் அவர்களே! நீங்களா கேட்கிறீர்கள் நீட்டி முழக்கிக் கூறவேண்டும் என்று! சொல்லுகிறேன் கேளுங்கள்!

(13-ம் பக்கம் பார்க்க)

# கூச்சம் இல்லை, கோபம்!

திருவரசன்.

"பளீர்!"

அறைந்துகொண்டான் அருணகிரி. அதிகமான கூச்சப்பட்டு நல்ல சந்தர்ப்பங்களை நழுவ விடும்போதெல்லாம், இப்படித்தான் தன்னைத் தானே அறைந்துகொள்வது அவனது வழக்கம்!

கன்னம் வலி எடுத்தது. என்ன பிரயோசனம்? அவள், ரமா காப்பியை ஸ்டூலின்மேல் வைத்துவிட்டுப் போய்விட்டாள்; போயேவிட்டாள்.

எரிச்சலுடன் காப்பியை எடுத்து சன்னல் வழியே வீசிக் கொட்டினான். அருணகிரி அழகன்தான்! படித்தவன்தான். ஆனால் எதற்கெடுத்தாலும் அவன் கொஞ்சம் அதிகமாகவே கூச்சப்பட்டுத் தொலைப்பான். மேலும் மாமாவின் வீட்டில், அவர் பெண் ரமாவுடன் பேச நினைத்தாலோ சொல்லவே வேண்டாம்.

ரமாவின் மேலும் தவறில்லை! காப்பியை மெனக்கெட்டு எடுத்துக்கொண்டு பதினேழு படிக்கட்டுகள் ஏறி வந்தவள், அவனின் கூச்சத்தை அறிந்து அவளாகவே குரல்கொடுத்தாள், "அத்தான் காபி!" என்று. அருணகிரி வாயைத்திறந்தால் தானே? அப்படி வாயைத் திறந்தாலும் வார்த்தைகள் வெளிவந்தால் தானே! முகத்தை அஷ்ட கோணலாக்கி அவளை நேருக்கு நேர் பார்க்கக் கூச்சப்பட்டுக்கொண்டு, ஸ்டூலைக் காட்டித் தொலைத்தான். பின்னே வராதா கோபம்? படக்கென்று காப்பித் தம்ளரை ஸ்டூலின் மேல் வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

பெருமூச்சுவிட்டான் அருணகிரி! இந்த வீட்டிற்கு வருவதற்குமுன்பே இந்தமாதிரி ரமாவை சந்திக்கும் இடங்களில் என்னென்ன வசனங்கள் பேச வேண்டுமென்று ஏற்கெனவே ஒத்திகை பார்த்துத்தான் வைத்திருந்தான். ஆனால் சமயத்தில் எதுவும் வரமாட்டேன் என்கிறதே!

கீழே மாடிப்படியில் யாரோ ஏறி வரும் சத்தம் கேட்டது. மாமா! "பாவம் மாமா" அவருந்தான் இவனுடைய கூச்சத்தைப் போக்கி கலகலவென்று இருப்பதற்கு என்னென்னவோ பண்ணுகிறார்! இப்போது கூட, அவனை திருச்சியிலிருந்து, அவர்தான் கூட்டி வந்திருந்தார்.

"என்ன அருணகிரி, வெளியே எங்கும் புறப்படவில்லையா?" மாமா மிகவும் குழைவுடன் வருங்கால மாப்பிள்ளையிடம் கேட்டார். அருணகிரி மென்று விழுங்கினான். மாமா மிகவும் பழக்கப்பட்டவர். அருணகிரியின் பதிலை அவர் எப்போதும் எதிர்பார்ப்பதில்லை.

"வெளியே எதுவும் வேலையில்லையென்றால், ரமா சாயந்திரம் சினிமாவுக்குப் போகிறாளாம்! நீயும்கூட போய்வா!" போய்விட்டார் அவர்.

'ஆஹா நல்ல சந்தர்ப்பம்' குதியாய்க் குதித்தான் அருணகிரி! அடுத்தகணம் சிந்தித்தான். சினிமா கொட்டகையில் ரமாவிடம் எதைப் பேசுவது? 'நர்மதாவின் கல்யாணம்' என்ற புத்தகத்தை அருணகிரி எட்டு தடவைக்குமேல் படித்திருந்தான். அதைப் பற்றி பேசலாமா? அல்லது 'அந்தரங்க காதல்' என்ற சினிமாவில் காதலனும் காதலியும் சந்திக்கும் முதல் கட்டத்தைப் பற்றி பேசலாமா? அது சண்டையில் அல்லவா முடிந்தது. என்ன செய்வது? சரி ரமாவையே பேசவிடுவோம். என்ன பேசுவாள்? 'அத்தான் படம் எப்படி?' என்பாளோ அது கடைசியில்தானே! முதலில் என்ன பேசுவாள்? 'அத்தான் உங்களுக்கு எந்த மாதிரி படங்கள் பிடிக்கும்' என்று குழைவாளோ? அதற்கு என்ன பதில் சொல்வது? அதாவது... அதாவது...

'பளீரென்று அறைந்து கொண்டான் அருணகிரி

* * *

டாணென்று ஐந்து மணிக்கெல்லாம் வெளியே கிளம்பிவிட்டாள் ரமா. அருணகிரி பின்தொடர்ந்தான். ஒருவார்த்தை பேசவேண்டுமே அவள். அருணகிரியும்தான். இப்போதென்ன அவசரம்? சினிமா கொட்டகையில் எப்படியும் பேசித்தானே தீரவேண்டும்! அப்போது பார்த்துக்கொள்ளலாம்' என்று விட்டான். இருந்தாலும் ரமா கோபமாயிருக்கிறாளா, அல்லது சாந்தமாயிருக்கிறாளா, என்பதைத் தெரிந்துகொள்ள, மிகவும் தைரியத்துடன் நைஸாக ஓரக்கண்ணால் பார்த்தான்.

'அடடா...! இந்த ரமாதான் எவ்வளவு அழகு! மஞ்சள் புடவையும், மஞ்சள் ஜாக்கெட்டும் இவளை மஞ்சள் மாம்பழமாக்கிவிட்டதே.........' தன்னை மறந்து ரசித்த அருணகிரி, இந்தமாதிரி சந்தர்ப்பங்கள் எல்லாம் நழுவிக் கொண்டே போவதையெண்ணி துடித்தான். கன்னத்தில் அறைந்துகொள்ள அவன் கைகள் அரித்தன.

"டேய் பாவி!"

அதிர்ந்து போனான் அருணகிரி! அவனுக்குக் கூச்சம் கொஞ்சம் அதிகமாகவே இருப்பது வாஸ்தவம் தான். அதற்காக அவனைவிட வயதில் சிறிய ஒரு பெண். அதுவும் ரமா, நடுரோட்டில் இப்படியா அவனைக் கூப்பிடுவது? மனம் குமுறினான்—அருணகிரி. 'இவளை......... இவளை......

முதுகில் 'படா'ரென்று ஒரு அடியும் விழுந்தது. மயக்கத்தில் கண்ணை



மூடி, மறுபடியும் திறந்தான் அருணகிரி.

''ஏண்டா பாவி கூப்பிடக் கூப்பிட திரும்பாமலே போகிருய்?'' என்ருன் ரங்கநாதன். அவன் அருணகிரி கூடப் படித்தவன். 'இவன் எப்படி இங்குவந்து சேர்ந்தான்?'

ரமா எங்கிருக்கிருள் என்று பார்த்தான் அருணகிரி. ஒரு அடி தள்ளி நின்றிருந்தாள் அவள். அவள் பக்கத்தில் இருந்த கூச்சத்தில் பேச, வாய் இல்லாமல் திருட்டு விழி விழித்தான் அவன்.

''என்னடா பதில் சொல்லாமல் திருட்டு விழி விழிக்கிருய்'' என்ருன் அவன் நண்பன் ரங்கநாதன்.

படிக்கும்போது தான் ஏதாவது ரங்கநாதனுக்குக் கெடுதல் செய்ததுண்டா என்று மூளையைக்குழப்பிப் பார்த்தான் அருணகிரி. எந்தவிதக் கெடுதியும் செய்ததில்லை என்று தெரிந்தது. பின் ஏன் இப்படி பழிவாங்குகிருன் பாவி! ஏதாவது பதில் சொல்லித்தான் தீரவேண்டும் என்ற நினைப்பில் முகத்தை அஷ்ட கோணலாக்கிக்கொண்டு ''அதாவது...ரங்கநாதா''...''என்று ஆரம்பித்தான்.

'கலகலவென்று சிரித்தவாறு இருவருக்கும் இடையில் வந்தாள் ரமா. ''என் அத்தான் எப்போதுமே இப்படித்தான்! அதிகமாகப் பேச மாட்டார்'' என்ருள்.

ரங்கநாதன் திகைத்தான் ''நீங்கள்...'' என்று இழுத்தான்.

''நான் இவரது மாமா பெண்! இவர் என் அத்தான்!''

திடுக்கிட்டான் அருணகிரி.என்ன மாய்ப் பேசுகிருள் இந்த ரமா! கூச்சம் என்பதே இல்லையா?

''அப்படியா......வணக்கம்! நான் ரங்கநாதன். நானும் இவனும் ஒன்ருய்ப் படித்தவர்கள். தற்சமயம் இங்குதான் வேலையில் இருக்கிறேன்'' என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டவன் ''ஏண்டா அருணகிரி, வாயேண்டா வீட்டிற்கு'' என்றழைத்தான்.

''இன்னொரு நாளைக்கு''...அருணகிரி முடிப்பதற்குள் ''வாருங்களேன் போய்த்தான் வரலாம்'' என்று சொல்லிவிட்டாள் ரமா.

அருணகிரியின் வாய் எப்படியோ திறந்தது. அதில் இருந்து இரண்டு வார்த்தைகளும் தைரியத்துடன் வெளி வந்தன.

''சினிமா...சினிமா'' என்ருன்.

''ஓ......நீங்கள் சினிமாவிற்குப் போய்க் கொண்டிருக்கிறீர்களா? ஐயாம் சாரி'' என்ருன் ரங்கநாதன்.

''பரவாயில்லை! இன்றில்லா விட்டால் நாளை அந்தப் படத்தைப் பார்த்துக்கொள்ளலாம், இன்று உங்கள் நண்பர் வீட்டிற்கே போகலாம். என்ன அத்தான்...'' பல்லைக் காட்டிஞள் ரமா.

பெருமாள் மாடு மாதிரி ''பூம்பூம்'' என்ற சப்தம் இல்லாமல் தலையை ஆட்டிஞன் அருணகிரி,

* * *

'பளீர், பளீரென்று அறைந்து கொண்டான் அருணகிரி.

'என்ன சந்தோஷம்? எத்தனைத் திமிர்? எவ்வளவு தைரியம்?...சே... சற்றும் கூச்சமில்லாமல் ரங்கநாதனின் வீட்டில் எப்படிப் பேசினுள் ரமா. ஆங்...அருணகிரி ஆண்மகன். அவனே பிறரிடத்தில் பேச என்ன மாய்க் கூச்சப்படுகிருன்! கேவலம் பெண்பிறவி. கொஞ்சம்கூட வெட்கமின்றி ஓர் அன்னியனிடத்தில் அதுவும் அவன் முன்னிலையிலேயே 'உளுத்தம் பருப்பு விலையில் இருந்து உலகஅழகிப் போட்டிவரை பேசித் தள்ளிஞளே......அருணகிரி என்று ஒருத்தன் பக்கத்தில் நாற்காலியில் உட்கார்ந்து கிடக்கிருனே அவனுக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுப்போம் என்பதுகூட உணராமல் ஒரே பேச்சு...ஒரே வெள்ளம்! அப்பப்பா...அந்த ரங்கநாதன் பயல் வீட்டில் அவன் மனைவி வேறு இல்லை. பிறந்தகம் போயிருக்கிருளாம் பிறந்தகம்! அவள் இருந்திருந்தாலாவது இந்தக் கண்ருவியை அடக்கியிருப்பாள். அருணகிரி மட்டும் சும்மாயிருந்தாஞ ... முயற்சி செய்துதான் பார்த்தான். வாயை மட்டும் திறக்கவில்லையே தவிர, மற்ற எல்லா வழிகளிலும் அவர்கள் பேச்சை முடிக்க என்னென்னவோ செய்து பார்த்தான். ஹு ஹும் நடக்கவில்லை. கோபம் பொத்துக்கொண்டு வந்தது அருணகிரிக்கு.

'இந்தக் கொடுமையில் சாயந்திர வேளையில் பொழுதே போகமாட்டேன் என்கிறதாம் இந்த ரமாவுக்கு! சரி, போகாவிட்டால் போகிறது. இந்த விஷயத்தைப் போய் ரங்கநாதனிடம் சொல்ல வேண்டுமா... அதைக் கேட்டு அவன் 'உங்களுக்கு ஆட்சேபணை இல்லாமல் இருந்தால் தினமும் அருணகிரியை அழைத்துக்கொண்டு வாருங்களேன்' என்று சொல்ல, 'அப்படித்தான் செய்தால் போகிறது' என்று ரமா கூறிவிட்டு அருணகிரியைப் பார்க்க, அருணகிரியும் தலையை ஆட்டித் தொலைத்து விட்டான்.

'ரமாவாம் ரமா ...... அப்படியே பாய்ந்து அவளை இழுத்துவந்து வலது கையால் ஓங்கி ஓங்கி அறையலாம்போல் ஆத்திரம் வந்தது அருணகிரிக்கு.

மாடிப்படி அதிர்ந்தது. ரமாதான்' காப்பியோடு வந்தாள்.

அருணகிரி வாயைத் திறக்கவில்லை. ஸ்டுலையும் காட்டவில்லை. முறைப்பாக இருக்க முயற்சி செய்

தான். ரமாவே ஸ்டூலின்மேல் காப்பியை வைத்துவிட்டு அருணகிரியைப் பார்த்து "அத்தான்" என்று குழைந்தாள்.

நீரில் கரைந்து உப்பானான் அருணகிரி. நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக்கொண்டது. முகத்தை அஷ்டகோணலாக்கி 'திரு திரு' வென விழித்தான் அவன்.

ரமா தரையைப் பார்க்காமல் அவன் முகத்தைப் பார்த்துத்தான் பேசினாள். "அத்தான், இன்றைக்கும் நாம் மிஸ்டர் ரங்கநாதன் வீட்டிற்குப் போகலாமா?"

'ஆஹா என்ன குழைவு! என்ன இழைவு! அடேய் அருணகிரி! அருமையான சந்தர்ப்பமடா.........மடப்பயலே பேசடா...பேசடா எதையாவது பேசித் தொலையடா' உள் மனது குடைந்தது.

முயன்று பார்த்தான் அருணகிரி. ஒருவார்த்தை! ஒரே ஒரு வார்த்தை ஊஹும்! முடியவில்லை! முடியவேயில்லை. அருணகிரி களைத்துத் தோற்றுப் போய்விட்டான். தலையை ஆட்டினான். ரமா ஓடிப்போய்விட்டாள்.

அருணகிரியின் மண்டையில் யாரோ ஜலதரங்கம் வாசித்தார்கள். அவன் கை அரித்தது. காப்பியை விழுங்கிவிட்டு அறைந்துகொள்ளலாம் என்று காப்பியை எடுத்தான். அதற்குள் அவன் மாமா நுழைந்தார், அவனைச் சீக்கிரம் ரெடியாகச் சொல்ல.

• • •

நான்காம்நாள் மாலை! காப்பியை எடுத்துக்கொண்டு ரமா வரவில்லை. மாமாதான் வந்தார். வழக்கமான அறிவிப்பை அறிவித்துவிட்டு கீழே இறங்கிப்போனார். அருணகிரி டீக்காக டிரஸ் செய்துகொண்டு வெளியில் வந்தான்,

புறப்பட்டாள் ரமா. அருணகிரி பின் தொடரவில்லை. முன்தொடர்ந்தான். பாக்கெட்டில் இருந்து கூலிங் கிளாசை எடுத்து ஸ்டைலாகத் துடைத்துவிட்டு அணிந்துகொண்டான். தெருமுனை வந்தது.

"டாக்சியைக் கூப்பிடுங்கள் என்றாள் ரமா.

இத்தனை நாள் இல்லாமல் இன்றைக்கெதற்கு டாக்சி? தொண்டையை இரகசியமாகக் கனைத்துக்கொண்டான் அருணகிரி, உள்ளுக்குள் நடுங்கிக்கொண்டிருந்த மனதையும், சரிவர இயங்க மறுக்கும் நாக்கையும் தட்டிக்கொடுத்தவாறே கம்பீரமான தொனியில் வினவினான் "எதற்கு?" என்று!

வியப்புடன் அவனைப் பார்த்தாள் ரமா. "எதற்கா?......மிஸ்டர் ரங்கநாதன் வீட்டிற்குப் போகத்தான்! அவர் நமக்காகக் காத்திருப்பாரே... சீக்கிரம் டாக்சியைக் கூப்பிடுங்கள்.

பல்லைக் கடித்துக்கொண்டான் அருணகிரி. 'ரமா' என்றான் பெருங் குரலில். அவன் குரல் அவனுக்கே அதிர்ச்சி அளித்ததால் குரலைச் சற்றுக் குறைத்துக்கொண்டான்.

"ரங்கநாதன் வீட்டிற்கு நீ வேண்டுமானால் போ! நான் வரவில்லை" என்றான்.

ஒன்றரைக் கண்ணால் பார்த்தாள் ரமா. "என்ன விஷயம்? அங்கு வராமல் வேறெங்கு போகப் போகிறீர்கள்?"

"அது என் இஷ்டம்!" மிகவும் கம்பீரமாகக் கூறிய அருணகிரி தன் இரண்டு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் நுழைத்துக் கொண்டான். "பீச்சுக்குப் போவேன்; இல்லையென்றால் சினிமாவுக்குப் போவேன்!"

மிகவும் அவசரமாக நெருங்கி வந்து அவன் முகத்தைப் பார்த்தாள் ரமா. "என்னைப் பார்த்துச் சொல்லுங்கள். நீங்கள் உங்கள் நண்பர் வீட்டிற்கு இன்று வரப் போவதில்லையா...?"

"அவன் என் நண்பனாக ஒரு காலத்தில் இருந்தான். இப்போது இல்லை" மிகவும் சோகமாகக் கூறினான் அருணகிரி.

"என்ன உளறுகிறீர்கள்?"

"உளறுவது நான் இல்லை ரமாதேவி! நீதான். அவனுடன் பேச உனக்கு விருப்பமிருந்தால் நீ போகலாம். என்னைக் கூப்பிடாதே! நீயும் அவனும் பேசி முடியுமட்டும் காவல் புரிய நான் வரமாட்டேன். அந்த வேலை எனக்குத் தேவையில்லை, தெரிந்ததா?" கைகளைப் பரப்பி சினிமா பாணியில் பேசிவிட்டு நடந்தான் அருணகிரி.

"நில்லுங்கள்! என்னை விட்டு விட்டு எங்கு போகிறீர்கள்?"

ஸ்டைலாகத் திரும்பினான் அருணகிரி. "பீச்சுக்கு."

"நானும் வருகிறேன்." அவனைத் தொடர்ந்தாள் அவள்.

இமயத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்தது அருணகிரியின் மனம். தான் அவளுடன் தொடர்வது போய், இன்று அவள் தன்னுடன் தொடர்ந்து வருகிறாள் என்ற எண்ணமே அவனுக்குப் பெருமையை அளித்தது.

கொஞ்ச தூரம் நடந்ததும் ரமா அவனைக் கூப்பிட்டாள்.

"அத்தான்!"

அருணகிரிக்கு கூச்சம் வரவில்லை வாயைத் திறந்து கேட்டான்.

"ஏன்?"

"என்மேல் கோபமா?" குழைந்தாள் அவள்.

'உன்மேல்எனக்கென்ன கோபம்? உன் வழியில் உனக்குப் போக உரிமை இருக்கிறது; என் வழியில் எனக்குப் போக உரிமை இருக்கிறது. அவ்வளவுதான் தனது கெட்டிக்காரத் தனமான பேச்சை தானே ரசித்தான் அருணகிரி.

'கலகல'வென்று சிரித்தாள் ரமா. "அடேயப்பா! எப்படிப்பேசுகிறீர்கள் நீங்கள்? ஏன் அத்தான், இதுவரையில் இதையெல்லாம் எங்கே ஒளித்து வைத்திருந்தீர்கள்?"

திருதிருவென விழிக்க ஆரம்பித்தான் அருணகிரி.

"அது போகட்டும் அத்தான். நான் மிஸ்டர் ரங்கநாதன் வீட்டிற்குப் போகிறேன் என்றுதானே உங்களுக்குக் கோபம்?"

அருணகிரிக்கும் கோபம் வந்தது. "நீ எங்கு வேண்மானாலும் போயேன், எனக்கென்ன?" என்றான் விறைப்பாக.

"அப்பப்பா...என்ன கோபம் வருகிறது உங்களுக்கு...? இந்த மாதிரி தானே எனக்கும் இருந்திருக்கும்?"

அருணகிரி இப்போது திகைத்தான். என்ன சொல்கிறாள் இந்த ரமா?

ரமா அவனை ஒட்டினாற்போல வந்தாள். ஆமாம் அத்தான். நீங்கள் என்னிடம் பேச கூச்சப்பட்ட ஒவ்வொரு தடவையும் எனக்குக் கோபம் வந்தது; அழுகையும் வந்

(12-ம் பக்கம் பார்க்க)

## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் செப்டம்பர் மாத பட்டியல் அனுப்பப்பட்டு உள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பிவைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்.
'காஞ்சி'

# ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி

ஒல்லியான உருவம்! உயரமான தோற்றம்! அழகின் வடிவம்! கற்பனையின் பிறப்பிடம்! கடல் மகளின் காதலன்!—இத்தனைக்கும் வித்தானவர் தான் ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி. ஏறத்தாழ பதினைந்தாவது வயதிலேயே கவிதைத் துறையில் ஈடுபட்டு முப்பது வயதிற்குள் முத்துச் சரங்களைப் போன்ற—இயற்கை அழகு கொழிக்கும் கவிதைகளை நாட்டுக்குத் தந்த நற்கவிஞர் இவர்.

கவிஞர் என்றாலே வறுமை நினைவு வரும். ஆனால் இவரோ பஞ்சத்தில் அடிப்பட்ட கவிஞராக இல்லாமல் பரம்பரைச் செல்வரான—பிரபுக்களின் குடும்பத்தில் தோன்றியவராவார். எனினும் இளம் பிராயத்தில் இவருக்கும் செல்வத்திற்கும் ஏழாம் பொருத்தமாம்!

தந்தையின் அருவெறுக்கத் தக்க செயலைக் கண்டித்தார், கண்ணியமிக்க ஷெல்லி. அதன் விளைவுதான் அவருக்கு இந்நிலை ஏற்பட்டது.

ஷெல்லியின் தந்தை என்ன செய்தார் தெரியுமா? தன் மகனுக்குக் காய்ச்சலால் மூளை சிறிது பாதிக்கப்படவே, அதுதான் பழிவாங்குதற்குத் தக்க தருணம் என எண்ணி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, தன் திருவிளையாடல்களைத் தீவிரப்படுத்த எண்ணிச் செயல்பட்டார். ஆனால் ஷெல்லிக்கு உண்மை தெரியவே உடனே அவர் டாக்டர் லிண்ட் மூலம் தந்தையின் சதியை முறியடித்தார்.

பள்ளியிலே படிக்கும்போதும் பற்பல சோதனைகளுக்கு ஆளானார் ஷெல்லி. தன்தாயைப் போல இவர் அழகிய தோற்றத்தைப் பெற்றிருந்த போதிலும், நோஞ்சானாக இருந்த காரணத்தினால் மாணவர்கள் இவரிடம் அளவுக்கு மீறி வம்பு செய்யத் தொடங்கினார்கள். அதைத் தாளாத அவர் ஒரு மாணவனின் கையில் கத்தியால் குத்தும் வெறியனாக மாறிவிட்டார்.

இளைஞரான—வசீகரத் தோற்றம் கொண்ட ஷெல்லியைக் காதலித்த பெண்டிருக்குக் கணக்கே இல்லை. சிலர் இவர்தான் என் காதலர் என்று மானசீகமாகவே காதலிக்கத் தொடங்கினார்கள். இவரது கவிதையினாலும் அழகிலும் கவர்ந்திழுக்கப்பட்ட ஆடவர்களும் பலர். கருத்தாழமிக்க, உணர்ச்சி மயமான—உவமை நயமிகுந்த ஷெல்லியின் கவிதைகள் அவர்களைக் கவர்ந்திழுத்ததில் வியப்பில்லை. பலர் இவரை குருவாகவும்—வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் தான் பிறந்த பொன்னாட்டில் சமூகம் இவரை அமைதியாக வாழவிடவில்லை. புகழ் பெற்று விளங்கிய பின்னர் தன்னை ஏறெடுத்துப் பார்க்கவந்த இங்கிலாந்தை ஏளனமாகப் பார்த்தார் ஷெல்லி.

இவருக்கு நடந்த திருமணம் விசித்திரமானது. இரண்டு பெண்களை மணந்துகொண்ட ஷெல்லிக்கு ஒரே பெண்ணை இரண்டு தடவை மணம் செய்து கொள்ளும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது.

தன்னைக் காதலித்த 'ஹாரியட்' என்ற பெண்ணை எடின்பரோவில் மணம்புரிந்துகொண்டு குழந்தையும் பிறந்த பின்னர், சிலர் இத்திருமணம் முறையானதல்ல என்று கூறியதால் அதே பெண்ணை மீண்டும் லண்டனில் திருமணம் செய்துகொண்டார். பின்னர் இவர்களுக்குள் கசப்புணர்ச்சி தோன்றவே அரசியல் தத்துவ வித்தகரான வில்லியம் காட்வினின் மகளான மேரியைக் காதலித்துத் திருமணம் செய்ய விரும்பினார். எதிர்ப்புக் கிளம்பியது. உடனே அவளை பிரான்சுக்கு அழைத்துச் சென்றார். தன் முதல் மனைவி தற்கொலை செய்துகொண்ட செய்தி அறிந்த பின்னரே மேரியை மணம் செய்துகொண்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★

மாண்புமிகு அமைச்சர்

மா. முத்துசாமி

அவர்களது

## இரஷ்யப் பயணம்

பற்றிய தொடர் கட்டுரை

விரைவில் காஞ்சியில் வெளியாகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★

எனினும், தன் பாட்டனார் இறந்த பின் அச்சொத்தில் தன் தந்தையிடமிருந்து தனக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பவுன் கிடைத்ததால், அதில் இருநூறு பவுனை தன் முதல் மனைவி உயிரோடு இருக்கும்வரை கொடுத்து வந்தார் ஷெல்லி.

ஷெல்லியின் முழுப் பெயர் 'பெர்ஸி பிஷி ஷெல்லி' என்பதாகும். கல்லூரியில் படிக்கும் போதே கிறிஸ்துவ மதத்தில் நம்பிக்கை இழந்த ஷெல்லி, எழுதிய நூல், 'நாத்திகத்தின் அவசியம்' இதுவே, இவரையும் இவருக்கு வக்காலத்து வாங்கிவந்த நண்பரையும் கல்லூரிக்குக்கைகழுவும் பெருமையைத் தேடிக் கொடுத்தது. பின்னர் பணமின்றி உழன்றபோது இவரது சகோதரிகள் சிறிது காலம் உதவினர்.

இயற்கையிலே இசைக்குயிலாகப் பிறந்த கவிஞர் ஷெல்லிக்குப் புகழ்தந்த பாடல்கள் 'மோகம்', 'அரிதூஸா', 'ஸ்கைலார்க்' என்பனவாகும். கவிதை நாடக நூல் 'ஸென்ஸி'.

இவரது அபிமானமிக்க கவிஞர் கீட்ஸின் அகால மரணத்தின் விளைவாக இவர் எழுதிய 'அடொனெய்ஸ்' என்ற கவிதைதான் இவரது புகழை உலகம் அறியச் செய்ததாகும்!

இவர்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள், பைரன், வால்டேர், கீட்ஸ், காலரிட்ஜ், ஸ்காட், வேட்ஸ் வொர்த் போன்றோராவர். பைரனும் ஷெல்லியும் இங்கிலாந்தில் பிறந்தபோதிலும் இருவரும் முதன் முதலில் சந்தித்த இடம் ஸ்வீட்சர்லாந்தாகும். ஷெல்லி புகழடைந்தது இதாலி, ஸ்விட்சர்லாந்து, பிரான்சு நாடுகளில்தான். இவரது கொள்கை பலரும் ஏற்கும் தரமுடையது. 'ஐந்துகண்ட மக்களும் ஒரு தாய்வயிற்று மக்களாவார்கள்'' என்றும், ''இன்னலைச் செய்து இன்பமடைவது எப்படி மானிடர்களே! அது இல்லாத ஊருக்குக் காட்டும் பாதையாகாதா?'' என்று கூறுகிறார். மேலும், ''அருமை மக்களே! இ

# காஞ்சி

## 4-ம் ஆண்டு மலர்

**வந்தால்-தந்தால்-தருவேன்!**

(அமைச்சர் மா. முத்துசாமி)

**அரிமா நோக்கு!**

(என். வி. நடராசன்)

**விரலுக்குத் தக்க வீக்கம்!**

(மா. கி. தசரதன்)

**எனது பயணம்!**

(அரங்கண்ணல்)

**மெய்யறிவு!**

(அ. மு. பரமசிவானந்தம்)

**இரவு என்ற குருவி!**

(சோமு)

**ஆகா! ஜப்பான்!**

(அண்ணல்)

**இரட்டைக் கொலை!**

(எஸ். எஸ். தென்னரசு)

**பெருங்காட்டு கதை**

—தில்லைவில்லாளன், எம். ஏ., எம். பி.

**காங்கிரஸ் அகில இந்தியக் கட்சியா?**

— எஸ். ஆர்.

முதலான கருத்துக் கருவூலங்களோடு

**அறிஞர் அண்ணாவின்**
**அமெரிக்கப் பயணத்தில்...!**

என்ற தலைப்பில் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம், I A S. அவர்களது புதிய செய்திகளோடுகூடிய சிறப்புக் கட்டுரையும்.

**அறிஞர் அண்ணா அவர்கள்**

படைக்கும் தீஞ்சுவைக் காப்பியங்கள் பலவோடு

**தயாராகிறது!**


வாமை என்ற நிலைநாடாமல்வேறுஎதைஎதையோ நாடுகிறீர்களே! ஏன்?'' என்று வினா எழுப்புகிறார்.

ஷெல்லி உலகத்தின் சிறப்புக்கள் அனைத்து மறிந்த கவிஞர். தியாகத்தின் சிறப்பையும் சேவையின் அருமையையும், பிறர் மகிழ்வில் மகிழ்ச்சியும், பிறருக்குத் துன்பம்வந்தால் அதைத் தன் துன்பமாகப் பாவிக்க வேண்டும் என்ற உயர் எண்ணத்தையும் இவரது கவிதைகளில் காணலாம். விண்ணில் நின்று பார்த்தால்தான் இம் மண்ணில் வாழும் மாந்தரின் நிலை தெரியும் என்று கருதி அங்கிருந்து கற்பனைக் கண்கொண்டு, பிறரை அடக்கும் ஆணவர்களையும், பொருள் பறிக்கும் வலியவர்களையும், என்னிலும் சிறியவன் என்று ஏளனம் செய்யும் புல்லர்களையும் பார்த்து அவர்களுடைய குருட்டு நம்பிக்கை களைய அறிவுறுத்துகின்றார்.

''போதிய வாசகர்களைத் தேடிப்பிடிக்காமல் இலக்கியம் படைக்கத் துவங்குவதைப் போன்ற கடினமான செயல் வேறு எதுவுமில்லை. அதை வரவேற்பதும் நல்லதல்ல'' என்ற கருத்துக் கொண்டிருப்பவர் ஷெல்லி. தனது படைப்புகளைத் தவிர பிறர் எழுதிய படைப்புகளைப் படித்துப் பார்க்க விரும்பாத எழுத்தாளர்களுக்கு அறிவுரை தான். ஷெல்லியின் பிணத்திலுள்ள சட்டைப் பையிலும் பிரித்து வைத்திருந்தபடி உள்ள 'கீட்ஸின்' கவிதை வரிகள்!

கவிதை நிலவாகக் காட்சிதந்த ஷெல்லியின் மரணம்தான் அகோரமானதாகும்.

தன் தொப்பி கடலிலே விழுந்துவிட்டதால், நீந்தத் தெரியாது என்பதையும் மறந்து கடலிலே பாய்ந்து தொப்பியை எடுக்கப்போன ஷெல்லியை ட்ரெலானி என்பவர் காப்பாற்றிவிட்ட போதிலும் ஷெல்லியின் விதி கடலிலேதான் சாகவேண்டும் என்று அமைந்துவிட்டதுபோலும்!

நண்பர்களுக்கு உதவுவதைப் பேரின்பமாகக் கொண்ட ஷெல்லி, கடல் கொந்தளிப்பதையும் பொருட்படுத்தாது பயணம் செய்தார்! பலன்— படகு கவிழ்ந்தது. பத்துநாட்களுக்குப் பின்னரே ஷெல்லியின் பிணம் கரையை அடைந்தது.

பைரன். ட்ரேலானி போன்ற நண்பர்கள் ஷெல்லியின் மலருடல் எரித்து ரோம் நகரில் சமாதி எழுப்பினார்கள்.

1792-ஆம் ஆண்டில் பிறந்த ஷெல்லி பதினைந்தே ஆண்டுகளில் தன் புகழை நிலைநாட்டி ஆங்கிலக் கவிஞர்களில் ஒருவராகத் தன்னை அகிலம் ஒப்புக்கொள்ளும் சாதனையைச் செய்து விட்டுத் தன்னைவிடுவித்துக்கொண்டார். ஆயினும் அவர் கவிதைகள் மக்கள் மனதிலிருந்து விடுவிக்க இயலாத நிலையில் ஒன்றியவையாகும்.

—கவிஞர் சேதரசு

★

# நெய்தல்

வல்லம் வேங்கடபதி, எம்.ஏ.,

நெடுங்கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல்
நீர்நிழலால் உயிர்மணக்கும் இயற்கைக் கோயில்!
படம்வரைய முயன்றாலும் பாட்டி னுக்குள்
பக்குவமாய்ச் சிறைபிடிக்க முனைந்திட் டாலும்
விடுபடும்நற் காட்சிகளோ கோடி என்பேன்
விட்டாலும் தொட்டாலும் அடியேன் என்ன
நெடியபுகழ் அந்துவனா? நெய்தல் பற்றி
நினைப்பதெல்லாம் நெய்துநெய்து அளிப்ப தற்கு!

கலைகனிந்து கனிந்துருகும் வண்ணம் நல்ல
கலைவல்லான் மனத்திலுறும் கனவுகள் போல்
சில்ச்சிலவாய்த் துளித்துளியாய் முத்து முத்தாய்
சிந்தியபே ரழகெல்லாம் விழிம லர்ந்து
நிலங்காணாப் புதுமையிது புதுமை என்றே
நீண்டபெரும் மூச்சோடு வியப்பில் மூழ்க
பலப்பலவாய்க் காணுமெழில் சித்தி ரங்கள்
பனித்திரைபோல்மெல்லமெல்லவிலகும்; தோன்றும்

அழல்நிறத்துப் பொடிமணலை அள்ளு தற்காய்
ஆர்ப்பரித்தே துள்ளியெழும் அலைகள் எல்லாம்
முழம்போட்டு அளக்குமொரு கையைப் போலே
முன்னேறும்; முன்னேறிச் சென்று சென்று
கழலாடும் பெண்ணுடைய வளைக்க ரம்போல்
கரைச்சரிவில் எழும்விழும்; சிலம்பம் ஆடும்!
புழுக்கத்தால் வியர்த்துவிட்ட பூமித் தாய்க்குப்
பூநுரைவெண் சாமரத்தை எடுத்து வீசும்!

குப்பென்று சிவந்திருக்கும் மேலை வானில்
கொடுங்கோலன் போல்வெய்யோன்வீழக் கண்டே
எப்பக்க மும்கேட்கும் பெருமு ழக்கம்
ஏழிசையின் வெள்ளம்போல் பாய்ந்தொ லிக்கும்
இப்பக்கம் நின்றபடி விழியை நீட்டி
இருண்டபெருங் கடற்பரப்பை நோக்க நோக்க
அப்பக்கம் வானழகன் கரம்வ ளைத்தே
— அணைக்கின்ற பேரின்பக் காட்சி தோன்றும்!

அலைநரம்புப் போல்தோன்றும் கால்கள் கொண்ட
இணைநண்டு இல்லறத்தின் இன்பங் கண்டு
அலைமேய்ந்த கரையோரம் மேயும் சென்று
அன்பொழுகும் அணைப்புக்குள் மயங்கும் நின்று
அலைந்தபடி கரைமணலில் ஓடி ஓடி
அன்புதரும் துணைதேடும் மற்றோர் நண்டு!
அலைமோதி வரக்கண்ட சின்ன நண்டோ
'அம்மம்மா' எனஒடுங்கும் வளைக்குள் சென்று!

கொத்துகொத்தாய் நீலமணி பூவெ டுத்துக்
கொல்லென்று கழிமுள்ளி சிரித்திருக்கும்!
நித்திலம்போல் அரும்பெடுக்கும் நெடுங்காற் புன்னை
நீண்டதழை உடையெடுத்து நீட்டும் ஞாழல்!
மத்தகத்துக் கொம்பேபோல் வருவார் மார்பை
முத்தமிடக் காத்திருக்கும் தாழை யின்பூ!
மெத்தென்ற காட்சியல்லால் வேறோர் காட்சி
மோகமலர்க் கூட்டத்தில் முகிழ்ப்ப துண்டோ?

விண்மீதில் அடுக்கடுக்காய் வந்து வந்து
வட்டமிடும் கரியமுகிற் கூட்டம் ஏது?
மண்குளிர இறங்கிவரும் மழைதான் ஏது?
மலையருவி, நீரோடை, மலர்க்கு ளங்கள்
பண்ணினிய தீஞ்சுனைகள் நதிகள் ஏது?
பயிரூட்டி வளர்க்கின்ற கால்வாய் ஏது?
தண்ணீரின் தாயகமாம் கடல்தான் இன்றேல்
தரணியிலே தலைநிமிர்ந்த வாழ்க்கை ஏது?

ஏர்உழுதல் வித்தூன்றல் அறுத்தல் போன்ற
எத்தொழிலும் அங்கில்லை என்ற போதும்
சீர்உண்டு; சிறப்புண்டு; செல்வ முண்டு!
செந்நாக்கொண் டேத்துகின்ற செழிப்பும் உண்டே
ஊர்உண்டு களிக்கின்ற உலுத்தர் வீசும்
ஊனமிகு பொய்வலைகள் ஒழிய அங்கே
ஓர்வலையே. மீன்வலையே சேர்ப்பன் தோளை
ஓவியம்போல் அலங்கரிக்கும்; கடல்அ ளக்கும்!

முற்றத்தில் மீன்உலரும்; காகம் வந்து
மூக்காலே குறிபார்க்கும்; வட்டம் போடும்!
சிற்றிடையாள் கைஅசைவில் கலங்கி வானில்
சிறகடிக்கும் மேலேறும்; இறங்கும் மீண்டும்!
மூற்றாத இளங்காற்று முற்றம் வந்து
முகம்சுளிக்கும்; என்றாலும் திரும்பிச் செல்ல
சற்றேனும் மனமின்றிச் சிலைப்பெண் ணாளைச்
சுற்றிசுற்றி உறவாடும்; ஊஞ்ச லாடும்!

நீர்நீந்தும் கண்ணோடு ஒருத்தி நீண்ட
நல்லழகு கழுத்தினிலே சங்கெ டுத்தாள்!
கார்கூந்தல் நெளிவில்அலை பாயப் பாயக்
கண்ணசைவில் கயல்மீன்கள் நீந்த விட்டாள்
நேர்வயிர முத்தொளியைப் பல்லில் சேர்த்தாள்
நிறம்பவழச் சிவப்பெடுத்தே உதட்டில் வைத்தாள்
தார்மணக்கும் சேர்ப்பனெங்கே? எங்கே? என்று
தவிப்படைந்தாள்; 'கடல்செல்வம்' சுமந்துநின்றாள்!

உப்பிலா உணவெடுத்தே உண்பா ருண்டோ
உண்டாலும் அதில்சுவையை உணர்வா ருண்டோ
சுப்பம்மாள் நடைபாதை இட்டி லிக்கும்
சுந்தரய்யர் சிற்றுண்டி இட்டி லிக்கும்
உப்பல்லால் வேறெதனால் சுவைகி டைக்கும்
உயர்சாதி தாழ்சாதி பிரிவால் ஆமோ?
உப்பில்லாச் சோறள்ளி வாயில் இட்ட
உடன்சினந்து துப்பாத மனித ருண்டோ?

அலைநீரில் பிறந்துவரும் உப்போ, அந்த
அன்னைமடியில் விழுந்தால் கரையும் மீண்டும்!
குலைநடுக்க விலையேற்றத் தீமை என்னும்
கொடியபுயல் வீச்சுக்கும் அணையாச் சோதி
விலைசிறிது! சுவைபெரிது! கள்ளச் சந்தை
வீணருடை தலைவாசல் மிதியாச் சால்பால்
நிலமனைத்தும் சுவையூற ஊற நெய்தல்
நிலைத்தபுகழ் பெற்றதென வாழ்த்து கின்றேன்!

# வல்வரவு

—இறைவன்—

அவள்!

ஓர் பூத்த மலர்! வண்ண மலர்! வண்டு சுற்று புதிய மலர்!

அவள் மேனி! மாந்தளிர் வண்ணம்!

கன்னம்! சுவைக்கும் மதுக் கிண்ணம்!

இதழ்கள்! தித்திக்கும் இனங்கள்!

அங்கே இறங்குவது தேன்ஊற்று! அணைத்துச் சுகந் தருவதில் அவள் ஓர் பருவக் காற்று!

அவள் தரும் விருந்து! பருவ நோய்க்குப் பருகுகின்ற மருந்து!

பட்டு மேனி கட்டான உடல்! கட்டிப் பிடித்தால் கடைசிவரை இனிக்கின்ற தேன் சொட்டு! பருவச் சிட்டு!

அவள் கண்பட்டு, மதிகெட்டு வாடினோர் பலர்! ஆனால் கூடினோர் இலர்!

பேரும் மங்கை! அவளும் மங்கை! குளிர்ச்சித் தருவதில் நிலவுக்குத் தங்கை!

அந்நங்கையும் ஓர்நாள் ஒருவனைக் கண்டாள்! அவனெழிலைக் கண்ணால் உண்டாள்! காதல் கொண்டாள்!

அவன்!

இளங்காளை! பகையென்றால் சுழற்றிடுவான் வாளை! அதுகண்டு அஞ்சி அஞ்சி எதிரியினம் அடிதொழுது போற்றுமவன் தாளை! வெற்றி மகள் விழைந்தணைப்பாள் அவன் தோளை!

அவன் பெயர் மாறன்! காதல் செய்வதிலும் கைதேர்ந்த மாரன்! போரில் சூரன்! புலிபோன்று சீறி மாற்றானை மாய்ப்பதில் வீரன்!

ஓர் நாள்!

அவன் தெருவழியே வந்தான்! அவனைத் தொடர்ந்து பருவக் கன்னியரின் ஏங்கிய விழிகளும் வந்தன!

அவன் நடந்துகொண்டிருந்தான்! அவன் கால்கள் தெருவைக் கடந்துக் கொண்டிருந்தன!

ஊரைத் தாண்டி, ஊர்க்கோடியில் நின்றிருந்தத் தேரைத் தாண்டி, ஆல மர வேரைத் தாண்டி குளக் கரையை அடைந்தான்!

அங்கு! நுங்கு எனும் இதழ் கொண்ட மங்கையெனும் பாவை! பறித்துக்கொண்டிருந்தாள் பூவை!

கோவையென இதழ் கண்டு கொத்தவரும் கிளி கண்டு கோல மயில் ஒத்த அவள் கூவ,

சேயழைக்கத் தாவிவரும் தாயெனவே தெருவழியே சென்றஅவன் அவளருகில் ஓட,

கிளி பறந்தது! அவள் கிலி மறைந்தது!

புலியென நின்று புன்னகை பூத்த அப்புதியவனைக் கண்ட அவள் பொன்முகம் சிவந்தது! தலைக் கவிழ்ந்தது!

காக்கைச் சிறகென கண்ணிமைகள் படபடக்க, நோக்காக்கால் நோக்கி, நோக்கம் புரிந்தவுடன், தான் நோக்க அவன் நோக்க, தளிர் மேனி அனலாக நின்றாள்! அவன் அருகே நின்றான்!

கண்நான்கு பேசிய கதை முடிந்து, கைநான்கு பேசிடும் நேரம் வந்தது! கால் நான்கு நகர்ந்தது!

'உன் பெயர் என்ன?'' என்றான்! உயிர்ச் சிலை வாய் திறந்து 'மங்கை' என்றாள்!

''மதி முட்டும் மேகத்தைத் தலை முட்ட வைத்தவளே! நீ மங்கை தான்! நான் கேட்டது உன் பெயரை!'' என்றான்!

''நானும் மங்கை! என் பேரும் மங்கை!'' என்றாள், பொங்கி வரும் கடல் முத்தை வாய்க் கொத்தாய் கொண்ட மகள்!

''உங்கள் பெயரென்ன என்றவள் தொடரு முன்னே உரைத்திட்டான் ''மாறன்!'' என!

''தெரியும்! நீங்கள் அழகில் மாறன்! அம்பெனும் மலரெடுத்து கரும்பென்னும் வில் தொடுத்து, காதலெனும் போர் தொடுக்கும் 'மாரன்' தான்! ஐயமில்லை! நான் கேட்டது பெயரை'' என்றாள்!

''நெஞ்சத்தில் குடிபுகுந்த பிஞ்சு முகம் கொண்டவளே! என் பெயரும் அதுதான்'' என்றான்!

அவள் சிரித்தாள்! அவன் ரசித்தான்!

''உன் முகம் அழகு!'' என்றான் அவன்!'' ''அருகு வந்துப் பழகு!'' என்றாள் அவள்!

''உனக்கு நான்'' என்றாள் கன்னி! ''நீ யெனக்குத் தேன்'' என்றான் காளை!

''நீ யின்றேல் நானில்லை'' உரைத்தான் அவன்!

''வானின்றேல் நிலவில்லை' உவமை தந்தாள் அவள்!

''வா! அருகு!'' என்றான்! ''தேன் பருகு!'' என்றாள்!

இரண்டங்கே ஒன்றாயிற்று! இருட்டங்கே துணை பேசிற்று!

காலம் கடந்தது! இயற்கை தன் கோலத்தை மாற்றியது!

கன்னிக் கடைவிழியின் அருள் தேடி வந்தமகன், கத்தும் கடலோடிப்பொருள்தேட விருப்புற்றான்.

'தான்பிரிந்து செல்வதனைத் தையலவள் கேட்டுவிட்டால், நீர் பிரிந்தக் கெண்டையென நெஞ்சம் துடிப்பாளே!

வான்பிரிந்த நிலவுக்கு வாழ்வேது என்றன்றே வாய்பிரித்துச் சொன்னாளே! ஐய்யய்யோ!

'ஏன் பிரிந்துப் போகின்றீர்?' என்றுரைத்தால் என் சொல்வேன்? எப்படியிதை உரைப்பேன்?'

என்றந்தக் காளை! எண்ணமிட்டவேளை!

அலைத்துளை விழியே இடை நுழைக்கும் நுண்ணிடையாள் பலாச்சுளையெனவே பக்கத்தில் வந்து நின்றாள்!

''ஏனத்தான் கவலையுடன் இருக்கின்றீர்?'' என்றாள், தேனைத்தான் இதழ் மூலம் சொரிகின்ற மானொத்தாள்!

என்ன சொல்வான் காளை?

கப்பல்தனிலேறி, உப்புக் கடல் தாண்டிச் செப்பரியப் பொருள் தேடிச் செல்வதனைச் சொல்வானா?

முப்போதும் பிரியாமல் முப்பாலை அவளிதழ்த்தேன் கொப்பரையில் குடித்தமகன் ''இப்போது பிரிகின்றேன்'' என்றங்கே சொல்வானா?

என்ன சொல்வான்? எப்படியதை விளக்கிடுவான்!

சிலையாக நின்றவனை அலைகரத்தால் தானணைத்து ''நிலைகுலைந்து நிற்பதேன்? என்றாள் கலைபேசும் விழிமூலம் காதல் விலைவீசும் அந்தக் காந்தச் சிலை! பழுத்தப் பழக்குலை!

இனிமேலும் உண்மையினை உரைக்காமல் இருப்பது தவறென்று உரைத்திட்டான் உண்மையினை!— அவன்!

உரைத்திட்ட சொல்கேட்டு, சிதைத்திட்ட சிலையெனவே சித்திரத்தாள் கீழ் வீழ்ந்தாள்!

பிழிந்திட்ட துணியாக, கிழித்திட்ட நாராகக் கிடந்தவளை எடுத்தணைத்தான் மார்பில்! மடிகிடத்தி மதிமுகத்தின் மேல்தெளித்தான்

ROCKFORT
BRAND
DALMIA
CEMENT

இப்பொழுது
தாராளமாகக் கிடைக்கிறது
கட்டுப்பாடுகள் ஒன்றும் இல்லாமல்

A DALMIA ENTERPRISE

டால்மியா ஸிமெண்ட் (பாரத்) லிமிடெட்
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு வொர்க்ஸ்: டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)
ஸோல் ஸெல்லிங் ஏஜன்ட்ஸ் : ஸிமென்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் பிரைவேட் லிமிடெட
டால்மியாபுரம் (சென்னை மாநிலம்)

நீரை! மயக்கத்தைத் தெளிவிக்கத் தூக்கி அமரவைத்தான் அவ்வழகுக் தேரை!

அவள் கண்மலர்ந்தாள்! அவன் மனமகிழ்ந்தான்!

"ஐயகோ! இன்னுமேன் உயிரோடு இருக்கின்றேன்?

இன்னுயிரே உனக்கென்ன கல் நெஞ்சோ? என்னத்தான் எனை விட்டுப் பிரியத்தான் போகின்ருர் என்றவொரு சொல்லைத்தான் கேட்டுத்தான் இன்னும் நீ வாழத் தான் நினைத்துத்தான் இருக்கின்ருயோ"

என்றவள் நீர் உகுத்தாள்! அவளையவன் அரவணைத்தான்!

"உயிரே!" என்ருன் அவன்!

"வெறும் உடல் நான் நான்! நீங்கள் பிரிந்தவுடன் பறந்துவிடும் உயிர்" என்ருள் அவள்!

"அப்படிச் சொல்லாதே நீ!" என்ருன் காளை!

நீங்களும் எனைபிரிந்துக் கொல்லாதீர்" என்ருள் கன்னி!

"பணத்தோடு வருவேன்" என்ருன் அவன்

"என்னுடலின் பிணத்தைத்தான் காண்பீர்" என்ருள் அவள்.

"சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன்......" என்று இழுத்தான் அவன்!

"அதைக்கேட்ட பின்னும் உயிரோடு இருப்பார் மாட்டு சொல்லி விட்டுப் போங்கள்" என்று அழுதாள் அவள்!

அவன்!

திகைத்தான்!

இதைத்தான் வள்ளுவர் இனிக்கத்தான் பாடியுள்ளார்!

பாடல் இதோ!

செல்லாமை உண்டேல் எனக்குஉரை! மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு ரை!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. எப்படி உங்கள் கூச்சத்தைப் போக்குவது என்றே புரியவில்லை. நல்ல வேளையாக உங்கள் நண்பர் நடுவில் வந்தார். சடாரென்று ஒரு யோசனை உதித்தது, அவரைப் பயன்படுத்திப் பார்த்தால் என்ன என்று!...வெற்றிதான்!"

"எப்படி?"

"அதாவது, மிஸ்டர் ரங்கநாதன் என்னிடம் பேசப் பேச, நான் அவரிடம் பேசப் பேச உங்களுக்குப் பொருமை வராவிட்டாலும், அட்லீஸ்ட் கோபமாவது வரும் என்று நினைத்தேன். உங்களுக்குக் கோபம் வந்தது. உங்களைப் போன்ற கூச்சமுள்ளவர்களுக்குக் கோபம் வந்தால் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது எனக்குத் தெரியும்; அதன் படியே..." முடிக்காமல் அவனைக் குறுகுறுவென பார்த்தாள் ரமா.

கொஞ்ச நேரத்திற்கு முன்பு இமய மலையின் உச்சியில் நின்றுகொண்டிருந்த அருணகிரியின் மனம், இப்போது பாதாள சாக்கடையில் மூழ்கி விட்டிருந்தது. அருணகிரி வெட்கப்பட்டான். வேதனைப்பட்டான். அவன் பேசாமல் நின்றிருப்பதைக் கண்டதும் ரமாவுக்கு கவலையாகிவிட்டது.

"என்ன அத்தான் மறுபடியும் கூச்சமா?" என்ருள்.

"இல்லை இல்லை கூச்சம் இல்லை! கோபம்!" என்ருன் சடாரென்று.

"நான் செய்தது தவருகப்பட்டால் என்னை அறையுங்கள்" என்று மாம்பழக் கன்னத்தைக் காட்டினுள்.

அருணகிரியின் கை அரித்தது. நடுரோடு என்றும் பாராமல் அவள் கன்னத்தருகே வலது கையைக் கொண்டுபோய் — தடவிக்கொடுத்தான்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

வெண்ணிற முத்தும், செந்நிற பவழமும் அணியாகி, நெஞ்சை அள்ளும் பண்ணும் கருத்தைக் கொள்ளும் சொல்லும் உருவாகி எவரும் நமக்கு நிகரில்லை—எவர்கரும் அடிமை நாமில்லை என்று தரணியெலாம் முரசு கொட்டி, சிங்களம், ஜாவகம், புட்பகம் முதலான......

காம:- நிறுத்து! நிறுத்து! நீ காங்கிரஸ் தியாகியா இல்லே தீனமூனுகானுவான்னேன்!

குரல்:- சந்தேகம், உயிரைக் கொல்லும் நோய் என்பீர்களே தலைவர் அவர்களே! காந்திக் கணக்கு கஸ்தூரிபா கணக்கு, வெள்ள நிவாரண நிதிக் கணக்கு, யுத்த நிதிக் கணக்கென்று நீங்கள் ஒருவர்க் கொருவர் போட்டி போட்டு வசூலித்த போதெல்லாம், ஐயா! கணக்கு!! என்றபோது "சந்தேகம், உயிரைப் பறித்துவிடும்" என்றீர்களே ஐயா! உங்களுக்கே சந்தேகமா?

காம:- ம்கூம்! எங்கேயோ தொட்டு, எங்கேயோ கைவைக்கிறேன்னேன்! நீ யாருன்னு கேட்டேன்னேன்! வெண்ணிறம், செந்நிறம்ன்னு அடுக்கு மொழியிலே தடுக்கி விழுறேன்னேன்! அதனுலே தான் நீ தியாகி இல்லேங்கறேன்!

குரல்:- ஐயா பெரியவரே! என் குரலை நீங்கள் செவிமடுக்காவிட்டாலும் வேதனைப்படமாட்டேன்! என்னைப் பழிக்காதீர்கள்! என் தியாகத்தைப் பழிக்காதீர்கள்!! லாலா லஜபதியின் சவப் பெட்டிக்கு ஆணி அடித்த கரங்கள் உங்களுடையவை! செக்கிழுத்த சிதம்பரனுரின் சவப் பெட்டிக்கு ஆணி அடித்த கரங்கள் என்னுடையவை! ஆசிய ஜோதி—அனைத்துலக அறிவுச் சுடர் நேரு பெருமகனுரின் சவப் பெட்டிக்கு ஆணி அடித்த கரங்கள் நம்முடையவை! என் தியாகத்தையா பழிக்கிறீர்கள்? ஐயோ!

[மீண்டும் அழுகுரல்]

காம:- இந்தா, இந்தா பாரு—அழாதேன்னேன்? அதிகப் பிரசங்கித்தனமா நீ பேசறதுனுலே, ஆத்திரத்திலே எதையாவது சொல்லுற மாதிரி வந்துடுதுன்னேன்! இப்பவாவது சொல்லு நீ யாருன்னு! ம், சொல்லுன்னேன்!

குரல்:- தலைவர் அவர்களே! இன்று மாலை யாருடைய கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தீர்கள், நினைவிருக்கிறதா?

காம:- நினைவில்லாமல் என்னுன்னேன்! தியாகி தேவதாஸ் நினைவுக் கூட்டத்துக்குப் போயிட்டு வந்தேன்னேன்! அவன் மூத்த பொண்ணு எஸ்கர் மணிகிட்டே 6594-ரூபாய் உதவிப் பணமா கொடுத்துட்டுதான் வந்து படுத்திருக்கேன்னேன்! இன்னும் 3400 ரூ கொடுக்கச் சொல்லி இருக்கேன்னேன்!

குரல்:- மகிழ்ச்சி ஐயா! மகிழ்ச்சி!! அன்றைய தியாகிகளுக்கு 5 ஏகர் நிலம்! இன்றைய தியாகிகளுக்குப் பண முடிப்பு!

காம:- அப்படிதான் முடியும்னேன! ஏன்னு இப்ப நம்பகிட்டே ஆட்சி இல்லே பாரு, அப்படிதான் முடியும்னேன்!

குரல்:- முடிந்ததைச் செய்கிறீர்கள்!

காம:- ஆமான்னேன்! இன்னும் நீ யாருன்னு சொல்லலேன்னேன்!

குரல்:- சொல்லுகிறேன்! சொல்லவேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது! சொல்லிவிடுகிறேன்! நான்......

[புகை மண்டலத்துக் கிடையே இன்னும் சில ஒளிக் கீற்றுக்கள்! அங்கிருந்தும் விம்மும் ஒலி கேட்கிறது.]

காம:- அங்கே யாருன்னேன்!

புதிய குரல்கள்:- (விம்மலுக் கிடையே) நாங்கள் யாரென்பதைப் பிறகு சொல்கிறேம்! இதோ நிற்கிருரே, இவர் யார் என்று முதலில் சொல்லட்டும்!!

காம:- நீங்கள்லாம் இங்கே எதுக்கு வந்திருக்கீங்கன்னேன்! நீயாருன்னு அவனைக்கேளுங்கங்கிறே! இதெல்லாம் என்ன மோசடின்னேன்!

பு. குரல்:- என்ன மோசடி என்று கேட்கத்தான் இங்கே வந்திருக்கிறேம் தலைவரே! அதோ, அவர் யார் என்று சொல்லச் சொல்லுங்கள்!

ப. குரல்:- சொல்லுகிறேன்! தலைவர் அவர்களே! இன்று மாலை யாருடைய கூட்டத்துக்கு அனுதாபம் தெரிவித்தீர்கள்?

காம:- காங்கிரஸ் கூட்டத்துக்கு!

[திடீரென்று புதிய குரல்களின் சிரிப்பொலி எழுகிறது]

பு. குரல்:- காங்கிரஸ் கூட்டத்துக்கு அனுதாபமா? அப்படிப்பட்ட நிலையா, இங்கே!

காம:- மூடு வாயைன்னேன்! காங்கிரஸ் தியாகி தேவதாஸ் மறைவுக்கு அனுதாபம்ன்னு சொல்ல வந்தேன்னேன்!

ப. குரல்:- பண முடிப்புக்கூட கொடுத்தீர்கள்!

காம:- ஆமாம்! ஆமாம்! ஆமான்னேன்!!

ப. குரல்:- யாரிடம் கொடுத்தீர்கள் ஐயா?

காம:- எஸ்தர் மணியிடம் கொடுத்தேன்னேன்!

ப. குரல்:- யார் அந்த அம்மையார்?

காம:- தேவதாசின் மூத்த மகள்னேன்!

ப. குரல்:- அந்த அனுதை ஆகிவிட்ட குடும்பத்துக்குச் சொந்தகாரன்தான் நான்! எஸ்தர் மணியின் தந்தைதான் நான்! நீங்கள் இரங்கல் கூட்டம் நடத்தினீர்களே இறந்துவிட்ட தேவதாசுக்கு! அந்த தேவதாஸ்தான் நான்!

காம:- அடப்பாவி! நான்தான் தேவதாஸ்ன்னு ஒரு வார்த்தை முதலிலேயே சொல்லி இருக்கக் கூடாதான்னேன்! என்னு, எதையும் கொஞ்சம் காரசாரமாகவே பேசிப் பேசி பழகிப்புட்டேன்னேன்!

பு. குரல்:- தியாகி தேவதாஸ் எப்படி ஐயா மாண்டார்?

தேவ:- எப்படி மாண்டேன்? நான்...

காம:- நிறுத்துன்னேன்! நான் சொல்றேன்னேன்! இப்போ இங்கே தி. மு. க. காட்டாட்சி நடத்துதுன்னேன்! நீதி கேட்டு ஊர்வலம் நடத்தினுங்க. கண்மண் தெரியாமலே அந்த குண்டன்ங்க அடிச்சு நொறுக்கிப்பிட்டானுங்கன்னேன்! அதுனுலே தேவதாசைக் கொன்னது தி.மு.காங்கறேன்னேன்!

தேவ:- தலைவரய்யா வந்து......

காம:- நிறுத்து. நான் பேசிப்புட்டேன்னேன்! சொல்ல வேண்டியதைச்சொல்லிபுட்டேன்னேன் நீங்கள் லாம் யாரு? எங்கே வந்தீங்க!

பு. குரல்:- சொல்கிறோம் தலைவரே! இவர் நீதி கேட்டு ஊர்வலம் நடத்தினார்! அப்படித்தானே?

காம:- ஆமான்னேன்!

பு. குரல்:- என்ன கேட்டார்?

காம:- படி அரிசி எங்கேன்னு கேட்டார்ன்னேன்,

பு. குரல்:- ஏன் அப்படிக் கேட்கவேண்டும்?

காம:- தி.மு காங்க சொன்ன சொல்லைக் காப்பாத்தச் செய்யணுங்கிற அக்கறையிலே கேட்டார்!

பு. குரல்:- வாக்குறுதியைக் காப்பாற்றக் கேட்டு ஊர்வலம் நடத்தினார்கள்! அது தறிகெட்டு நடக்க முற்பட்டபோது தடியடி நடைபெற்றது. அதிலே இவர்—இந்த தேவதாசும் சிக்கினார்! காயம் பட்டார்! பிறகு இறந்துபோனார்—நாற்பது நாட்களுக்குப் பிறகு!

காம:- ஆமாம்! இவரைக் கொன்னது தி. மு. க. ஆட்சி தான்னேன்!

பு. குரல்:- நாங்கள் யார் தெரியுமா?

காம:- சொன்னாதானே தெரியும்ன்னேன்!

பு. குரல்:- நாங்களும் நீதிதான் கேட்டோம்! நாங்களும் உரிமைக்காகத்தான் போராடினோம். 3½ கோடி ஊழியர்களது பிரதிநிதிகளாயிருந்து 'உரிமை கொடு! குடும்பத்தைக் காப்பாற்று! என்று குரல் கொடுத்தோம்! போராட்டத்துக்குப் பரிசு கிடைத்தது! இன்முகத்தோடு ஏற்றுக்கொண்டோம்!

காம:- போராடினால் சும்மாவான்னேன்! போராட்டம் நடத்தின வெற்றிகரமா நடத்தனும்னேன்! என்ன பரிசு கிடைச்சுது? சொல்லுன்னேன்!

பு. குரல்கள்:- [வேதனையோடு] பரிசு கிடைத்தது! போராட்டத்துக்கு வெற்றியும் கிடைத்தது தலைவரே! எங்களுக்குக் கிடைத்த பரிசு—நாற்பது கோடி மக்களின் நல்வாழ்வுக்குப் போராடிய காந்தியடிகளுக்குக் கிடைத்த பரிசு! 20 கோடி கருப்பர்—வெள்ளையர்களின் சம உரிமைக்காகப் போராடிய கென்னடிக்குக் கிடைத்த பரிசு, மார்டின்லூதர் கிங்குக்குக் கிடைத்த பரிசு!! துப்பாக்கிகளின் வெடிச் சப்தங்கள் எங்கள் விலா பக்கத்தில்—நெஞ்சகத்தில், மார்பில் முதுகில். எங்கெங்கெல்லாமோ பாய்ந்து வெளிப்படுத்திய செங்குருதியின் செம்மை, எம்மை இங்கே கொண்டு வந்து சேர்த்தது! துப்பாக்கி ரவைகள் எங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறது! எங்களில் ஒன்பது பேர் துப்பாக்கிரவைக்கு உயிர் கொடுத்தோம் இரண்டு பேர், இந்த தேவதாசைப்போல் தடியடிப்பட்டுப் பலியானோம்! எப்போது தெரியுமா தலைவரே—19-9-68ல்! இந்த தியாகிக்கு நிதி வழங்கினீர்களே — அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு!

காம:- துப்பாக்கிச்சூடா! ஐயோ! ஐயோ! நீங்களும் செத்துப் போனவங்கதானான்னேன்!

பு. குரல்கள்:- செத்துப்போனவர்கள் அல்ல தலைவரே—சாக அடிக்கப்பட்டவர்கள்! சுட்டுக் கொல்லப் பட்டவர்கள்! நீதி கேட்க வந்திருக்கிறோம்! எங்கே நீதி?

காம:- நீதியா? நிதியான்னேன்?

## தயவுசெய்து நம்புங்கள்!

தென் கொரியாவில் கிங்-உங்-யங் என்ற ஒருவர் ஆங்கில—ஜெர்மன் மொழிகளில் அபார புலமைப் பெற்றிருக்கிறாராம்! வண்ண ஓவியங்கள் வரைந்து பல பரிசுகளும் பெற்றிருப்பதோடு, பல வல்லுநர்களையும் திகைக்கச் செய்திருக்கிறாராம்! இப்பொழுது கணிதப் புலமை பெறுவதற்காகப் பயிற்சி பெறுகிறாராம்! இதில் என்ன வியப்பு என்கிறீர்களா? இனிமேல்தான் வியக்கவேண்டும்! அவருக்கு வயது மூன்றுதானாம்! வியக்கிறீர்களா இல்லையா?

தகவல்-திருப்பத்தூர் நாராயணன்

ஆதாரம்:—'டிட் பிட்ஸ்.'

பு. குரல்:- நீதி கேட்கிறோம், எங்கே நிதியென்று!

காம:- தேவதாஸ் தியாகி! தி. மு. காக்களால் அடித்துக் கொல்லப்பட்டவர்! அதனால் அவருக்கு நிதின்னேன்!

பு குரல்:- நாங்களும் தியாகிகள்தான்! 3½ கோடி அரசு ஊழியர்களுக்காக, ஊதிய உயர்வும், வேறு சில சலுகைகளும் கேட்டுப் போராடினோம்! உங்கள் காங்கிரஸ் அரசாங்கம் எங்களைச் சுட்டுக் கொன்றுவிட்டது, 300-க்கு மேற்பட்டவர்கள் தடியடியால தாக்குண்டு ஐயோ! அம்மா! என்று அவலக் குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்! எங்கள் வீட்டு மனைவி மக்கள் எழுப்பும் சோகஒலி உங்கள் காதுகளுக்கு எட்டவில்லையா? உங்கள் ஆட்சியின் அஸ்திவாரமாக இருக்கும் நாங்கள், சுட்டுக் கொல்லப்படலாமா? எங்கள் சேவை உங்களுக்குத் தேவையில்லையா? நீதி வேண்டும் ஐயா! நீதி வேண்டும். ஆகவே எங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் நிதி வேண்டும்!

காம:- ஐயையோ! உங்களுக்கும் நிதி வேண்டுமா? நான் எங்கே போவேன்னேன்! எல்லோருக்கும் நிதி கொடுக்க இங்கெ ஒன்னும் கொட்டிக் கிடக்கலேன்னேன்!

[மறுபடியும் புகை மண்டலத்துக் கிடையே பல்லாயிரக் கணக்கான ஒளிக் கீற்றுக்கள்! அவைகளின் அவலக் குரல்கள்! விம்மல் ஒலிகள்! காமராசர் பதறுகிறார்! துடிக்கிறார்! ஆத்திரமாகக் கர்ஜிக்கிறார்.]

காம:- இதெல்லாம் என்னன்னேன்! இதென்ன வீடா! சுடுகாடான்னேன்! அடிச்சிக்கொல்லப்பட்டவனும் சுட்டுக் கொல்லப்பட்டவனும் வந்துட்டானுக! நீங்கள்லாம் யாருன்னேன்?

புதிய குரல்களின் பிரதிநிதி குரல்:- பெரியவரே! எங்களைத் தெரியவில்லையா உங்களுக்கு! தெரியாதுதான்! தெரிய முடியாதுதான்! பல்லாண்டுக் காலம் தமிழ் நாட்டுக் காங்கிரசுக்குத் தலைவராகவும், எட்டாண்டுக் காலம் தமிழ் நாட்டின் முதலமைச்சராகவும், 6 ஆண்டுக் காலம் அ. இ. கா. க வின் தலைவராகவும் இருந்துவிட்டுவந்த தங்களுக்கு எங்களை யாரென்று தெரியாதுதான்! தலைவரே! எங்கள் தியாகத்தைச் சுட்டிக் காட்டித்தான் இன்னமும் உங்கள் வயிறுகள்

நிரப்பப்படுகின்றன என்ற உண்மையை மறந்துவிடுகிறபோது எங்களை எப்படித் தெரிய முடியும்? சுதந்திரப் போராட்டத் தொடக்க முதல் 1942 இறுதி வரையில் எங்களில் குண்டுகளால் கொல்லப்பட்டோர் 940 பேர்! பாதுகாப்புக் கைதிகளாக வைக்கப்பட்டோர் 18 ஆயிரம் பேரா! சிறைக்குள் தள்ளிப் பூட்டப்பட்டோர் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்! 539 தடவைகளில் எங்களில் 940 பேரது உயிர் பறித்துக்கொள்ளப்பட்டது. எங்கள் குடும்பங்களின் கதி பற்றி யாராவது ஒரு வார்த்தை பேசினீர்களா? ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்ததுண்டா? ஒரே ஒரு ரூபாய் நிதியளித்ததுண்டா...எங்கள் குடும்பத்துக்கு நிதியளிபபது பற்றி நினைத்தாவது பார்த்ததுண்டா? இந்த தேவதாசுக்கு நிதி வழங்கிவிட்டு, நிமிர்ந்து நின்று கர்ஜிக்கிறீர்களே! சவப்பெட்டி சவப்பெட்டி என்று சவபபெட்டியுடனேயே சல்லாபம் புரிகிறீர்களே! நாட்டுமக்களது வாட்டம் போக்கும் முறையில் நல்ல பல திட்டங்களால் நலிவு நீக்கி வரும் கழக அரசுக்கு மாசுகற்பிக்கும் வகையில் வார்த்தைகளை உமிழ்ந்து வருகிறீர்களே! தலைவர் அவர்களே! நீங்களா கழகத்துக்கு தியாகம் என்பதற்குப் பொருள் கூற முனைவது! வெட்கப்படுகிறோம்!

[இரண்டாவதாகத் தோன்றிய அரசு ஊழியர்களின் பிரதிநிதி குறுக்கிட்டு]

ஆமாம்! வெட்கப்படத்தான் செய்கிறோம்! ஈவிரக்கமற்ற முறையில் எங்களை மட்டுமல்ல— எங்களைப் போன்றவர்களைச் சுட்டுக்கொன்று மலையாகப் பிணங்களை அடுக்கிவைத்துக் கொண்டிருக்கும் உங்கள் கட்சியின் அராஜகத் தன்மைகளை மூடி மறைத்துவிட்டு கழகத்துக்கு நீதி போதனையென்று r. தியாகம் என்றும் கூறுகிறீர்களே! அது கேட்டு வெட்கப்படுகிறோம்!

கழகத்தின் கண்மணிகளை, நீதிகேட்டுப் போராடிய நித்திலங்களை, உரிமைக்காகப் போராடிய உத்தமத் தோழர்களை பட்டப் பகலில் உடல் துடிக்கத் துடிக்கக் கொன்று குவித்தீர்களே! மொழிகாக்கத் துடித்தெழுந்த மாணவமணிகளின் உயிரை துப்பாக்கிக்கு இரையாக்கினீர்களே! அவர்களைப்பற்றி அன்று கேலி பேசி கெக்கலி கொட்டினீர்களே! அவையாவும் உங்களுக்குத் தியாகமாகத் தெரியவில்லை மொழிக்காக தன் இன்னுயிரை தீத் தாய்க்குத் தந்த சின்னசாமி பற்றி கடனுல் செத்தான் என்று புலம்பினீர்களே! தியாகம் பற்றி எப்போதையா உங்களுக்கு ஞானம் வந்தது! கழகத் தியாகச் சுடர் விளக்குகளைச் சுட்டுக் கொன்றபோதும், கட்டாரிக்கும் வெட்டரிவாளுக்கும் பலியாக்கிக் கொன்றபோதும் அவர்களது குடும்பங்கள் கதறித் துடித்தது கண்ணில் படாமல் போனதேன்? ஒரே ஒருவரைத் தியாகியாக்கிவிட்டு அவருக்கு சில ஆயிரங்களையும் தந்துவிட்டு இதழ்களின் மீது பார்வையை ஓட்டுகிறீர்களே! உங்களுக்குத் தெரியுமா, உங்களது அராஜகப் போக்கால் உயிரை இழந்த தியாகமணிகளது அத்துணைக் குடும்பத்துக்கும் கழகம் நிதியுதவி செய்தது என்று! தெரியாது! தெரிந்து கொள்ளவும் மாட்டீர்கள்! தெரியத் தேவையுமில்லை என்பீர்கள்!

தேவதாஸ் குடும்பத்துக்கு நிதியுதவி அளித்தீர்களே! அந்தப் புத்தியாவது உங்களுக்கு வந்ததே! அதற்கக ஒரு மகிழ்ச்சி தலைவரே! ஒரு மகிழ்ச்சி!

எங்கள் பெண்டு பிள்ளைகள் வீதியில் நின்று அழுது புலம்பிக்கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்காக ஒரு வேண்டுகோள்!

எங்களுக்கும் நிதி உதவி தாருங்கள்! இந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும் உதவி புரியுங்கள்! தயாரா? தயாரா? தலைவர் அவர்களே தயாரா? என்று கேட்கிறோம்! தயார்தானு?

காம:- நிறுத்து, நிறுத்து, நிறுத்துன்னேன்! இங்கே யாரும் பேசக்கூடாதுன்னேன்! போங்க வெளியேன்னேன்! நிதியும் தரமுடியாது, ஒண்ணும் தரமுடியாதுன்னேன். வெளியே போங்கன்னேன்!

[காமராசர் மூர்ச்சையாகி விழுகிறார்! புகைமண்டலம் மறைகிறது! வந்தவர்கள் அனைவரும் காணப்படவில்லை]

[தியாகி தேவதாஸ் குடும்பத்துக்கு நிதி உதவி செய்துவிட்டு வந்து படுத்த காமராசர் பார்வையில் 20-9-68-ம் நாளைய செய்தி இதழ்கள் கண்ணில்பட்டிருந்தால் அதைப் படித்த காமராசர் மனம் என்ன நினைத்திருக்கும் என்பதுபற்றி எண்ணிப் பார்த்ததின் விளைவே இது. தியாகிகள் மட்டும் மன்னிக்கவும்.]

★

12—10—'68 இதழில்!

கற்பனைக்கும் எட்டாத ஒரு கவின் படைப்பு!

உள்ளத்தை உலுக்கிவிடும் ஓர் உணர்ச்சிக் கதை!!

எஸ். எஸ். தென்னரசு அவர்கள் எழுதும்

ஒரே ரத்தம்!

படிக்கத் தவறாதீர்கள்!!

# சாதாரண நோய்களிலிருந்து நிம்மதியான நிவாரணம் பெற...





**முதுகு வலி:**
முதுகு, கழுத்து, தோள்பட்டைகளில் அமிர்தாஞ்சனத்தை சூடு பெறத் தேய்க்கவும்.

**நரம்புச் சுளுக்கு:**
சுளுக்கு ஏற்பட்ட இடத்தில் அமிர்தாஞ்சனததை நன்ருக அழுத்தித் தேய்த்து வெந்நீர் ஒத்தடம் கொடுக்கவும்.

## அமிர்தாஞ்சனம்

75 வருடங்களுக்கும்
மேலாக புகழ் வாய்ந்தது




AMR-


ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
88, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.